**சிசி 65/2022**

**எ. சா. 1**

**பெயர் : ரோகிணி**

**24.12.2024**

**எதிரி தரப்பில் பிரிவு 315ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின்பேரில் விசாரிக்கப்படுகிறார்.**

1. நான் பல்மருத்துவராக பணிபுரிந்துவருகிறேன். புகார்தாரர் வரதராஜை எனக்கு தெரியாது. நான் வரதராஜிடம் புகாரில் சொன்னவாறு எந்த கடனும் வாங்கவில்லை காசோலையும் அவரிடம் கொடுக்கவில்லை. தாவா வழக்கு காசோலை எனது கணவர் கோபாலகிருஷ்ணனிடம் கொடுத்து வைத்திருந்தேன். என்னுடைய காசோலைகள் அனைத்தையும் எனது கணவர்தான் வைத்திருப்பார். ராம்ராஜ் என்பவரிடம் எனது கணவர் ரூ.100000/- கடன் வாங்கியிருந்தார். அதற்கு ஆதராவாக எனது கணவர் அந்த காசோலையை ராமராஜிடம் கொடுத்திருந்தார். மேற்படி காசோலையில் கையெழுத்து செய்து கொடுத்திருந்தேன். மொத்தம் ராமராஜிடம் என்னுடைய 5 காசோலைகள் மற்றும் 5 புரோ நோட்டும் கொடுத்துள்ளோம். எனது கணவரின் 5 காசோலைகள் மற்றும் 5 புரோ நோட்டும் கொடுத்திருந்தோம். மொத்தம் 10 காசோலை கொடுத்திருந்தோம்.

2. ராமராஜிடம் கொடுத்து வைத்திருந்த காசோலையை அவர் வரதராஜிடம் கொடுத்து காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார். ராம்ராஜ் என்பவர் என் மீது தாக்கல் செய்துள்ள சிசி எண் 60/2022 வழக்கில் உள்ள ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்கிறேன்.

1. கடனுறுதிசீட்டு சான்று நகல் எசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2.காசோலை எண் 229279 சான்று நகல் எசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3.வங்கி சலான் சான்று நகல் எசாஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது

4. ரிட்டன் மெமொ சான்று நகல் எசாஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது

5.வழக்கறிஞர் அறிவிப்பு சான்று நகல் எசாஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது

6. போஸ்டல் ரசிது சான்று நகல் எசாஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது

7. ஒப்புகை அட்டை சான்று நகல் எசாஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது

8.சிசி 60/2022 புகார் சான்று நகல் எசாஆ 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது

மேலும் ராம்ராஜ் என்பவர் என் மீது தாக்கல் செய்துள்ள சிசி 61/2022 வழக்கில் ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்கிறேன்.

9. கடனுறுதிசீட்டு சான்று நகல் எசாஆ 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10.காசோலை எண் 229280 சான்று நகல் எசாஆ 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11.வங்கி சலான் சான்று நகல் எசாஆ 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது

12. ரிட்டன் மெமொ சான்று நகல் எசாஆ 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது

13.வழக்கறிஞர் அறிவிப்பு சான்று நகல் எசாஆ 21 ஆக குறியீடு செய்யப்படுகிறது

14. போஸ்டல் ரசிது சான்று நகல் எசாஆ 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது

15.ஒப்புகை அட்டை சான்று நகல் எசாஆ 23 ஆக குறியீடு செய்யப்படுகிறது

16.சிசி 61/2022 புகார் சான்று நகல் எசாஆ 24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ராம்ராஜ் என் மீது தாக்கல் செய்துள்ள இரண்டு வழக்குகளும் நான் காசோலை பணம் செலுத்திவிட்டதால் முடித்து வைக்கப்பட்டு என்னை வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் என்னை இந்த வழக்கில் இருந்து விடுவிக்கவேண்டுகிறேன்.